Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 18/2021** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosection – **PW34** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர்.அஜய்கிருஷ்ணன் |
| Father/Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | மருத்துவர் |
| Religion | : | |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.02.2026

( 1, 9 எதிரிகள் இறப்பு, 2 முதல் 5, 7, 8, 10, 16, 17, 19 எதிரிகள் ஆஜரில்லை, 2 முதல் 5, 7, 8, 10, 16, 17, 19 எதிரிகள் தரப்பில் BNSS –355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 6, 11 முதல் 15 மற்றும் 18 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது திருச்சி ஜோசப் கண் மருத்துவ கல்லூரியில் முதுநிலை பட்ட மேற்படிப்பு படித்து வருகிறேன். கடந்த 20.05.2018 ம் தேதி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் இரவு 11.35 மணியளவில் பணியில் இருந்தபோது வாலாந்தரவை அம்மன் கோவில் தெருவை சேர்ந்த ராஜேந்திரன் மகன் விஜய் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்குகொண்டுவரப்பட்டார். அவர்

சிகிச்சைக்கு சேர்க்கப்படும்போது சுயநினைவோடு இருந்தார். அவரை பரிசோதிக்கையில் தலையில் வெட்டுக்காயம் இருந்தது. கழுத்தில் குத்துக்காயம் இருந்தது. அந்த காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என விசாரித்தபோது தன்னைத் தெரிந்த நபர் அன்று இரவு 09.30 மணியளவில் கலாம்நகரில் வைத்து அருவாள் கொண்டு தாக்கியதில் தனக்கு காயம் ஏற்பட்டதாக கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் அந்த நபருக்கு தயார் செய்த விபத்து பதிவேட்டு அறிக்கை **அ.சா.ஆ.51**. மணி என்ற பூமிநாதன் த/பெ.முனியசாமி, அம்மன்கோவில்தெரு, வாலாந்தரவை என்ற நபரை ஒரு தனியார் ஆம்புலன்சில் சிகிச்சைக்கு கொண்டு வந்தார்கள். நான் அவரை பரிசோதித்தபோது அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என்பது தெரியவந்தது. நான் அந்த நபரின் பிரேதத்தை சடலக்கூராய்வு செய்வதற்கு பிணவறைக்கு அனுப்பி வைத்தேன். மணி என்ற பூமிநாதனுக்கு நான் தயார் செய்த விபத்துபதிவேட்டு அறிக்கை **அ.சா.ஆ.52**. 02.05.2018 ம் தேதி அதிகாலை 03.20 மணியளவில் வாலாந்தரவை அம்மன்கோவில் தெருவை சேர்ந்த விஜய் த/பெ.ராமசாமி வயது 26 என்பவரை அரசு ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்டார். அவரை பரிசோதித்தபோது அவரும் ஏற்கனவே இறந்துவிட்டார் என்பது தெரியவந்தது. நான் அந்த நபரின் பிரேதத்தை சடலக்கூராய்வு செய்வதற்கு பிணவறைக்கு அனுப்பி வைத்தேன். அந்த நபருக்கு தயார் செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கை **அ.சா.ஆ.53**. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

விபத்து பதிவேடு வரிசை எண்படி பதிவு செய்வோம் என்றால் சரிதான். ராஜேந்திரன் மகன் விஜய் என்பவருக்கு தயாரிக்கப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கையின் வரிசை எண்.3146 என எழுதப்பட்டு பின்னிட்டு 3150 என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதை நான் எழுதவில்லை என்றால் சரிதான். வரிசை எண்ணை மாற்றம் செய்யவேண்டும் என்றால் சுருக்கொப்பம் செய்யவேண்டும் என்றால் சரிதான். நான் மேற்படி விஜய் என்பவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து இறுதி கருத்து தெரிவிக்கும்போது மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சிகிச்சை விவரங்களை பார்த்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு அறிக்கையில் Alleged to assault என எழுதப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது

என்றும், அதன் தொடர்ச்சி இல்லாமல் This incident happened approximately at Kalam Nagar என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆயுதத்தின் தன்மை சிக்கில் என இடைச்செறுகலாக எழுதப்பட்டு வட்டமிடப்பட்டுள்ளது என்றும், அது என்னால் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பின்னிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விஜய் என்பவர் சிகிச்சைக்கு கொண்டுவரப்பட்ட நான்கு மணிநேரம் கழித்துத்தான் மற்றொரு விஜய் மற்றும் பூமிநாதன் ஆகிய இருவரின் உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு தயாரிக்கப்பட்ட விபத்து பதிவேடு அறிக்கையில் Brought Dead என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். குத்துக்காயத்தில் ஆழத்தை குறிப்பிடவேண்டும் என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸ் டிரைவர் இறந்த நபர்களின் உடல்களை எங்கிருந்து எடுத்துக்கொண்டு வந்தார்கள் என நான் தயார்செய்த விபத்து பதிவேடு அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.